# திருக்கோயில் திருமுறை மெய்யியல்

**முனைவர் சிவ. நடராஜன்**
**உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை**
**ஸ்ரீலஸ்ரீ காசிநாசி சுவாமிநாத சுவாமிகள் கலை கல்லூரி,**
**திருப்பனந்தாள்- 612504. sivanatarajansiva@gmail.com.**

45

**குறிப்புச் சொற்கள்:-**
கோயில் – இறைவன் கண்ணுக்குப்புலனாகும் படி உள்ள இடம், திருமுறைகள் – சைவசமய இலக்கியம், ஊனுடம்பு - சதை, எலும்பால் ஆனவுடம்பு, குடி – ஆட்பட்டிருத்தல், துாங்கானை மாடம் – யானை துாங்குவது போன்று வடிக்கப்பட்ட விமானம், விண்ணிழி விமானம் – தேவர்கள் திருவீழிமிழலைக்கோயிலுக்கு அமைத்த விமானம்.

ஆய்வு சுருக்கம்:- தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடத்தக்கதான பன்னிரு திருமுறைகள் குறிப்பிடும் ஆலய அமைப்பியலும் தெய்வங்களும் குறித்த நுண்பொரு ளையும் மனித உடலமைப்பே ஆலயம் என்ற உணர்தலையும் ஆய்வு கட்டுரைக் குறிப்பிடுகிறது.

**முன்னுரை:-**

உலகளாவிய நிலையில் தமிழர் பண்பாடு மக்களால் கூர்ந்து நோக்கப் படுவதும் ஆழ்ந்து அறிந்து பயனடைய தக்கதாயும் விளங்குவது விளங்குகின்றது என்பது வெள்ளிடைமலை. தமிழகம், தமிழ் மக்கள், தமிழர் வாழ்வியல் முறைகளில் முதன்மைத்துவம் கொண்டதாக - வழிபாட்டு முறை – வழிபாடு – உள்ளது. சங்க காலம் தொடங்கி பக்தி இலக்கிய காலம் வரையிலும், இலக்கியம் கடந்த நிலையில், மரபு சார்ந்த நிலையில் இன்றளவும் வழிபாட்டு முறைகள், மனிதன் பிறவிப் பெருங்கடலை நீந்திட தக்க வழிகாட்டியாய் விளங்குகிறது. தமிழ் இலக்கியத்தின் இன்றையமையாப் பகுதியான பன்னிரு திருமுறைகளை முதன்மைப் பொருளாகக் கொண்டு, திருக்கோயில் – திருமுறை - மெய்யியல் என்னும் தலைப்பில் அரிமா நோக்கென இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

**திருக்கோயில் :-**

தமிழரின் திருக்கோயில் – அமைப்பு - வழிபாட்டு முறை - இன்று உலகளாவிய நிலையில் பின்பற்றப்படுகின்றது. தமிழ் மக்களின் வழிபாட்டு முறையின் - தோற்றுவாயை - காரணத்தினை - தொல்காப்பியம் முதலான தமிழ் நூல்கள் நுண்பொருளாக விளங்குகின்றன. இந்நூல்களில் குறிப்பிடப்படும் தெய்வங்கள் நிலத் தெய்வங்களாக வழிபாட்டு வளர்ச்சியில் முடிவில் காணவருகின்றன. இறை வழிபாட்டின் முதிர்ச்சியின் வெளிப்பாடாக விளங்கும் சமய நூல்கள் இறைவனுக்கும் நில தெய்வங்களுக்குமான வேறுபாட்டையும் வழிபாட்டின் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டுகின்றன.

நுாறுகோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறுகோடி நாராயணர் அங்ஙனே

ஏறுகங்கை மணல் எண்ணில் இந்திரர்

ஈறிலாதவன் ஈசன் உருவனே.[1]

அஞ்சி ஆகிலும் அன்பு பட்டாகிலும் [2]

சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம் [3]

என்ற திருமுறை பாடல் அடிகள் சான்றாக நின்று தெரிவிக்கின்றன. இக்கருத்துத் தொடர்ச்சியாக,

செத்துப் பிறக்கும் தெய்வங்கள் மணவாளா …… [4]

என்ற அருள் இலக்கியவாக்கும் சிந்திக்கத் தக்கது.

நிலத் தெய்வங்களாக விளங்கும் சேயோன், மாயோன், வருணன், இந்திரன் மற்றும் கொற்றவை ஆகிய தெய்வங்கள் பெயர்கள் மட்டும் குறிப்பிடப் பெற்று முறையே மலை, காடு, நிலம், கடற்கரை மற்றும் பாலை என்ற இடங்கள் மட்டும் தெய்வங்களுக்குரியனவாக தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன ஆனால் ஆலய அமைப்பு அதனோடு தொடர்புடைய ன வற்றை முறையாக தெள்ளிதின் விளக்கவில்லை.

**திருமுறை** :-

திருமுறை என்ற சொல், நூல் என்ற பொதுப் பொருள் உடையதானாலும் திருமுறை என்றவுடன் தமிழறிந்த பொது மக்களுக்கும் சைவ சமயம் சார்ந்த வாழும் அன்பர்களுக்கும் திருஞானசம்பந்தராதி சேக்கிழாரந்தமாக 27மூவர் அருளிய பன்னிரு திருமுறைகள் முதலில் நினைவுக்கு வரும். இத்திருமுறைகள் எண் பெயர் கொண்டும், சிறப்பு பெயர் கொண்டும் சுட்டி அழைக்கப்படுகின்றன. திருமுறைகள் இறைவன் எழுந்தருளியுள்ள ஆலயத்தின் அமைப்பை, குறிப்பாக கருவரையின் அமைப்பை எடுத்துக்காட்டுகின்றன. சான்றாக தூங்கானை மாடம், தோணிபுரம், வீழிமிழலை விண்ணிழி விமானம், கொகுடிக் கோயில், மணிக் கோயில், ஆலக்கோயில் முதலியன ஆகும். ஆலயஅமைப்பைத் திருமுறைப் பதிகப் பாடல்கள் பதிவு செய்து காட்டுகின்றன. கருவரை விமானத்தின் அமைப்பினைத் தொடர்ந்து ஆலயத்தின் திருச்சற்றுகள் அமைப்பினைத் திருமுறைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு,

மதில் பிரமபுரத்து உரையும் காவலனை [5],

மதில் ஆனைக் காவானை [6]

முதலாய திருமுறை தொடர்கள் சான்றாவன.

**ஆலயத்தின் பொது அமைப்பு** :-

ஆலயத்தின் பொது அமைப்பு என்பது ராஜகோபுரம், பலிபீடம்,கொடிமரம், நந்தி, திருச்சிற்றுக்கள், முன்மண்டபம், மகாமண்டபம், அர்த்த மண்டபம், கருவறை என்றவாறு காணப்படுகின்றன. இவ் அமைப்பானது மனித உடலின் அமைப்பை ஒத்து உள்ளதாக மெய்யியல் நூல்கள் குறிக்கின்றன. மெய்யியல் நூல்களில் ஒன்றான திருமந்திரம்,

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் [7]

என்று குறிப்பிடுகின்றது.

திருமுறைகள் ஆலயத்தினுடைய கருவறை விமானம் தொடர்ந்து திருச்சிற்று எனப்படும் மதில் சிறப்பு ஆகியன குறிப்பிட்டதனைத் தொடர்ந்து மனித உடலை ஆலயம் எனவும் தெளிவு செய்வதை

அறியமுடிகிறது..

அடுத்ததாக 12 ஆம் திருமுறையில் ஒரு ஆலயத்தின் உடைய புறக்கட்டமைப்பு என்பதனை சிற்ப நூல்கள் குறிப்பிடும் முறை மாறாமல் அமைப்பதனை

அடி முதல் உபானம் ஆதியாகிய படைகள் எல்லாம்
வடிவுறுந் தொழில்கள் முற்ற மனத்தினால் வகுத்துமான
முடிவுறுந் சிகரந்தானும் முன்னிய முத்தின் கொண்டு
நெடிதுநாள் கூடக் கோயில் நிரம்பிட நினைவால் செய்தார். [8]
தூவியும் நட்டு மிக்க சுதை நல்வினையும் செய்து
கூவலும் அமைத்து மாடு கோயில் சூல் மதிலும் போக்கி
வாவியும் தொட்டு மற்றும் வேண்டுவ வகுத்து மன்னுந் தாபரஞ்
சிவனுக்கு ஏற்ற விதித்த நாள் சாரும் நாளில். [9]

என்ற பாடலில் பூசலார் நாயனார் மனதினால் ஆலயம் முறைப்படி எழுப்பினார் என்பது தெரியவருகிறது. இறைவன், மன்னன் கட்டிய ஆலயத்திலும், பூசலார் நாயனார் மனதினால் அமைத்த கோயிலைச் சிறந்ததாக எண்ணி எழுந்தருள விரும்பிய நிகழ்வையும் புராணம் விரித்து கூறுகின்றது. இங்கே பன்னிரு திருமுறைகளின் தொடர் நிரலில் இறைவனுடைய விமானத்தை, மதில் சுவற்றைக் குறிப்பிட்டதும், உடம்பே ஆலயம் என குறிப்பிட்டதும் மனக்கோயில் எழுப்புவதும் என்ற ஒரு நிரல் முறையை காணும் பொழுது அல்லது உற்றுநோக்கும் பொழுது இறைவனுடைய ஆலயத்தைப் புறக்கண்ணால் கண்டும் அவற்றின் அமைப்பை மனதிலே நிறுத்தியும் நீள நினைக்கும் பொழுது இறைவன் இடம் எழுந்தருளும் இடம் மனக் கோயில் என்பதும் அக வழிபாட்டிற்கு புறவழிபாடும், புறவழிபாட்டிற்கு அகவழி பாடும் ஒன்றோடு ஒன்று இணைந்து துணை நிற்பன என்பதும், ஆலயத்தை புறக்கண்ணால் கண்டு மனம் ஒன்றி வழிபாடு செய்தல் சிறந்தது என்பதை மெய்யியல் வழி நின்று திருமுறை நூல்கள் மெய்ப்பிக்கின்றன.

**முடிவுரை** :-

தமிழர் பண்பாடுகளில் மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து பிறவிப் பெருங்கடலை கடந்து பிறவா நிலையை அடைய வேண்டும் என்னும் உயரிய நிலையை சமய நூல்கள் ஆலயத்தின் அமைப்பு என்பதனை எடுத்துக்காட்டி மனித உடம்பே ஆலயம் என்ற மெய்யியல் கோட்பாட்டை உணர்த்துகின்றன. ஆலயம் என்பது கலைநயம் மிக்க இறைவன் எழுந்தருளியுள்ள இடமாயினும் கலைநயம் மிக்க இடத்தில் மனித மனம் லயித்து இறைவனோடு ஒன்றிட வேண்டும் என்பதை புறமாகவும் அகமாகவும் பன்னிரு திருமுறை நூல்கள் உய்த்துணர வேண்டிய நிலையில் கோடிட்டுக் காட்டுவதனைக் கட்டுரை இயம்பியுள்ளது.

**சான்றெண் விளக்கம்-**

அப்பர்தேவாரம், ஆதிபுராணக் குறுந்தொகை, பா.3
அப்பர்தேவாரம், திருநின்றியுர் தேவாரம், பா.1
அப்பர், மறுமாற்றுத் திருத்தாண்டகம், பா.5

ஸ்ரீகுமரகுருபரர், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ். பா. 12

திருஞானசம்பந்தர்,சீகாழி தேவாரம், பா.5

அப்பர், திருவானைக்காதேவாரம், பா.6

திருமூலர், திருமந்திரம், ஏழாந்தந்திரம், பா.1

சேக்கிழார்,பெரியபுராணம் பா.4182

சேக்கிழார்,பெரியபுராணம் பா.4183

**துணைநூற்பட்டியல்**

பன்னிருதிருமுறைகள்,வெளியீடு- ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள் – 612504. ஆண்டு-1993.

ஸ்ரீகுமரகுருபரர் பிரபந்தத் திரட்டு, வெளியீடு-

அண்ணாமலைப்பல்கலைக் கழகம், சிதம்பரம். ஆண்டு2000